சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.104/2016

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திருமதி. பவழக்கொடி<br>க /பெ. குப்புசாமி | நாள்.14.07.2025 |
| வயது. 61 | வட்டம் |
| கிராமம். உப்பு வேலூர் | மாவட்டம். |

<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. நான் வழக்கில் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 30.03.1948, 05.07.1956 மற்றும் 06.08.1958 தேதியிட்ட எனது பாட்டனார் பெயரில் உள்ள கிரய ஆவணங்களின் சார் பதிவு நகல் வா.த.சா.ஆ. 1 முதல் 3. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா வா.த.சா.ஆ.4. பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய 15.11.2016 தேதியிட்ட வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் வா.த.சா.ஆ.5. 1 முதல் 3 பிரதிவாதிகள் அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் வா.த.சா.ஆ.6 முதல் 8. என்னால் தயாரிக்கப்பட்ட வம்சா வழிப்பட்டியல் வா.த.சா.ஆ.9. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

(பிரதிவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)